மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்

<u>அ.வ.எண். 348/2020</u>

**நாள்– 12.08.2025**

**வா.சா. 2 – திரு.M.ராமசாமி**

<u>குறுக்கு விசாரணை</u>:

1)எனது பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் யார் சொன்னதன் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் சொன்னதன் பேரில் தாக்கல் செய்யப்பட்டது. எனது பிரமாணப் பத்திரிக்கையில் உள்ள செய்திகள் எனக்குத் தெரியும். நான் எதற்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் கோவில் வழக்கிற்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன். மேற்படி வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகள் தாவா கோவிலில் சமஉரிமை உண்டு என்றும் தாங்கள் நிர்வாகிக்க வேண்டும் என்றும் கூறியதால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எனது பிரமாணப் பத்திரிக்கையில் கூறியுள்ள 3 பிள்ளையார் கோவிலில் எது குறித்து சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் ஸ்ரீ விநாயகர் கோவில், அரச மரத்துப் பிள்ளையார் கோவில் ஆகிய கோவில்கள் குறித்து சாட்சியமளிக்க வந்துள்ளேன். தாவா சொத்து எந்த கோவில் சம்பந்தப்பட்டது என்றால் ஸ்ரீ விநாயகர் கோவில் சம்பந்தப்பட்டதாகும், ஸ்ரீ சக்தி விநாயகர் கோவில் என்று கூறினால் அது தவறு என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் வழக்கு கோப்பினைப் பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 வாதியால் தாக்கல் செய்யப்பட்ட கோவில் நிர்வாக கோப்பு ஆகும். வா.சா.ஆ.9 எந்த பிள்ளையார் கோவில் சம்பந்தப்பட்டது என்றால் ஸ்ரீ சக்தி விநாயகர் கோவிலுக்கு உடையதாக குறிப்பிடப்பட்டுள்ளது, அது கணக்குப்பிள்ளையால் எழுதப்பட்டது. கோவிலின் பெயர் ஸ்ரீ  விநாயகர் கோவில் தான். வா.சா.ஆ.9ல் பக்க எண் 1ல் ரங்கனுர் ஸ்ரீ சக்தி விநாயகர் கோவில் தொடங்குவதற்காக கணக்கு  என்றும் ஊர் பொதுமக்கள் ரங்கனுர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். தர்மகர்த்தா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9க்கும் ஸ்ரீ விநாயகர் கோவிலுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்து 2 தாக்குகளை உடையது. முதல் தாக்கு சுமார் 1600

சதுர அடியும், இரண்டாம் தாக்கு சுமார் 2600 சதுர அடியும் உடையது. அதன் சர்வே எண் 561/12 கிராம நத்தம் ஆகும். தாவா கோவிலின் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் பட்டா வாங்கப்படவில்லை. தாவா கோவில் புறம்போக்கு கிராம நத்தம் என்றால் சரியல்ல, கிராம நத்தம் ஆகும். ரங்கைய கவுண்டர் எனது பாட்டனாரின் தந்தை ஆவார். அவர் பள்ளிபாளையம் அக்ரகாரம் கிராமத்தினைச் சேர்ந்தவர், அங்கு மணியக்காரராக இருந்தார் என்றால் ரங்கனூரில் குடியிருந்து பள்ளிபாயைம் அக்ரஹாரம் கிராமத்தில் மணியக்காரராக இருந்தார். பள்ளிபாளையத்திற்கும் ரங்கனூருக்கும் சுமார் 4 ,5 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். ரங்கையக் கவுண்டர் பள்ளிபாளையத்தில் குடியிருந்ததால்தான் பள்ளிபாளையம் மணியக்காரராக இருந்தார் என்றால் சரியல்ல. ரங்கையாக் கவுண்டருக்கு பூர்வீகமே பள்ளிபாளையம் தான் என்றால் சரியல்ல.

4) என்னுடைய குலதெய்வம் பள்ளிபாளையம் கலியனூர் ராசா கோவில், மல்லசமுத்திரம் அங்காளம்மன் கோவில் ஆகும். ரங்கையக் கவுண்டருக்கு 3 வாரிசுகள், ராமன் (எ) ராமையக் கவுண்டர், ஆறுமுகக் கவுண்டர், வருதப்பக் கவுண்டர் ஆவார்கள். ராமன் (எ) ராமையக் கவுண்டர் அவர்களுக்கு 2 வாரிசுகள், ரங்கசாமிக் கவுண்டர், சுப்பக் கவுண்டர் ஆவார்கள். வாதி T.ராமசாமி ரங்கசாமி கவுண்டருடைய வாரிசாவார். ரங்கசாமிக் கவுண்டருக்கு மூன்று வாரிசுகள், குப்புசாமி, லட்சுமணக் கவுண்டர், ராமசாமி ஆவார்கள். சுப்புக் கவுண்டருக்கு 3 வாரிசுகள். மேற்படி 6 வாரிசுகளில் யார் தர்மகர்த்தா என்றால் ரங்கசாமிக் கவுண்டர் அவருக்குப் பின்னிட்டு குப்புசாமிக் கவுண்டர் அவருக்குப் பின்னிட்டு லட்சுமணக் கவுண்டர் ஆவார்கள். தற்போது லட்சுமணக் கவுண்டரின் வாரிசுகளான வாதிகள் தர்மகர்த்தாவாக உள்ளார்கள். மேற்படி நபர்கள் தர்மகர்த்தாவாக இருந்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ரங்கசாமிக் கவுண்டர் தர்மகர்த்தாவாக இருந்தபோது ஆவணங்கள் இல்லை, குப்புசாமிக் கவுண்டர் தர்மகர்த்தாவாக இருந்தபோது மின்சார இணைப்பு அவர் பெயரில் வாங்கப்பட்டது. லட்சுமணக் கவுண்டர் தர்மகர்த்தாவாக இருந்ததற்கான ஆவணங்கள் எதுவுமில்லை. குப்புசாமி கவுண்டர் தர்மகர்த்தாவாக இல்லை என்றும் அவர் பெயரில் மின்சார இணைப்பு தர்மகர்த்தாவாக வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

5) ராமன் (எ) ராமையக் கவுண்டருடைய ஆண் வாரிசுகள் எத்தனை பேர் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் 6 பேர் ஆவர். அந்த 6 பேரும் இந்த

வழக்கில் வாதிகள் இல்லை என்றால் சரிதான். வாதிகள் இருவரில் யார் தர்மகர்த்தா என்றால் T.ராமசாமி ஆவார். T.முத்துச்சாமி தர்மகர்த்தா இல்லை என்றால் சரிதான். ராமன் (எ) ராமையக் கவுண்டருடைய அனைத்து வாரிசுகளையும் வழக்கின் வாதிகளாக ஏன் சேர்க்கவில்லை என்றால் கோவில் நிர்வாகத்தை T.ராமசாமி பார்த்துக் கொள்வதால் அவர்களை சேர்க்கவில்லை. T.ராமசாமி எப்போது தர்மகர்த்தாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் வருடம் ஞாபகமில்லை. எதனடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் பரம்பரையாக வழிவருவது ஆகும். நிர்வாகக் குழு கூட்டம் நடத்தப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்றால் இல்லை. பொதுவாக மூத்த வாரிசுகள் தான் தர்மகர்த்தாவாக இருப்பார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக மூத்த வாரிசுகள் தான் தர்மகர்த்தாவாக இருப்பார்கள் நான் வழக்கிற்காக இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**